DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.44/2024**
Prosecution witness **PW.4 (LW3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராமதாஸ் | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(A1 to A3 personal appeared dispensed by Hon'ble High Court. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **03.11.2025**

**03.11.2025 முதல் விசாரணை** :

1. நான் சின்னகரும்பாலத்தில் குடியிருந்து லாரி ஓட்டுனராக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 கிஷோரை எனக்கு தெரியும். வழக்கின் விவரம் எனக்கு தெரியும்.

2. 31.03.2015 ம் தேதி மாலை 6 மணிக்கு சேலாஸ்க்கு செலவு பொருட்கள் வாங்குவதற்காக நான் சென்றிருந்தேன். அங்கு திராவிடர் கழகத்தின் சார்பில் ஒரு மீட்டிங் நடந்து கொண்டிருந்தது. நான் செலவு வாங்கிக்கொண்டிருந்த போது அங்கு பேசிக்கொள்வதை கேட்டேன். அப்போது 1ம் எதிரி துரை சந்திரசேகர் கும்பாபிஷேகத்திற்காக ஐயர்கள் 4 மணி நேரம், 5 மணி நேரம் மேலே நின்றுகொண்டிருப்பார்கள் என்றும், அவர்கள் சிறுநீர் கழிப்பதற்கு கூட இறங்க முடியாது என்றும், அதை சொம்பில் பிடித்து வைத்து அதை தான் தீர்த்தம் என்று தெளிக்கிறார்கள் என்றும் பேசினார்.

3. அப்போது அங்கிருந்தவர்கள் அதை தடுத்தார்கள். அ.சா.1 கிஷோர் மேடையின் மீது ஏறி சத்தம் போட்டார். அவரை இரண்டு பேர் கட்டையால் அடித்துவிட்டார்கள். அதில் கிஷோருக்கு வலதுபக்க தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. கிஷோரை அடிக்கும் போது அ.சா.3 கார்த்திக் தடுக்க சென்றால்

அவரையும் 2ம் எதிரி நாகேந்திரன் கட்டையால் அடித்துவிட்டார். அதில் கார்த்திக்கின் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது.

4. நான் செலவு வாங்க சென்றிருந்த காரில் கிஷோரையும் கார்த்தியையும் குன்னூர்அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று சேர்த்தேன். எதிரிகள் தாக்கிய கம்பை தற்போது பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 மரக்கட்டைகள் தான் அது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

__குறுக்கு விசாரணை__ :-

1. அன்றைய தினம் சேலாஸ்க்கு என்னுடன் யார் வந்தார்கள் என்றால் என்னுடன் யாரும் வரவில்லை, நான் மட்டும் தான் சென்றேன். அ.சா.1 கிஷோர், அ.சா.3 கார்த்திக் என்னுடன் வந்தார்களா என்றால் இல்லை. சுமார் 10 முதல் 50 பேர் அந்த கூட்டத்தில் இருந்தார்கள். கிஷோரும் கார்த்தி மட்டும் தான் சம்பவம் குறித்து கேள்வி கேட்டார்கள். நான் எதுவும் கேட்கவில்லை. சம்பவத்திற்கு மறுநாள் போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்த போதும் தற்போது முதல் விசாரணையில் சொன்னது போல் தான் சொன்னேனா என்றால் ஆம்.

2. நான் சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்வது பொய் என்றும், என்னை ஒரு சாட்சியாக பொய்யாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. போலிசார் சொலலிக்கொடுத்ததன் பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

__மறுவிசாரணை__ – இல்லை.

Sd/–
Abdul Salam
Judicial Magistrate,
Coonoor